புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2026** **11 ஜனவரி 2026**

## <u>பத்திரிகை செய்தி</u>

தேசிய மருத்துவர் கழகம், ஆரோக்கிய பாரதி, மற்றும் புதுச்சேரி சேவா பாரதி அமைப்புகள் சார்பில் புதுச்சேரி கடலோர கிராம மருத்துவ முகாம் நிறைவிழா இலாசுப்பேட்டை, விவேகானந்தா மேல்நிலைப் பள்ளியில் இன்று(11.01.2026) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மருத்துவ முகாம்களில் சேவை ஆற்றிய மருத்துவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்.

மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாநிலங்களவை உறுப்பினர் திரு S. செல்வகணபதி, தேசிய மருத்துவர் கழகத் தலைவர் திரு விஜய் ஓசா ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தேசிய மருத்துவர் கழகம் சார்பில் புதுச்சேரி, கடலோர கிராமங்களில் 25 இடங்களில் மருத்துவ முகாம்கள் இன்று நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக விவேகானந்தா பள்ளியில் ரத்த தான முகாம் நடைபெற்றது. அதில் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு ரத்த தானம் செய்தனர்..